ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1818/20 - 2013 ජූලි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.07.11

*1818/20 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### நெல் குற்றும் தொழில்

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நெல் குற்றும் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் நாளன்று நண்பகல் 12.00 மணிவரை சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,<br>
தலைவர்,<br>
நெல் குற்றும் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,<br>
கொழும்பு 5,<br>
*2013, யூலை 03.*

### அட்டவணை

நெல் குற்றும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் தேதிய 14950 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிடப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தையிடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

### II ஆம் பாகம்

### சம்பளங்கள்

நேர வேலைக்கு ஏற்புடைத்தான ஆகக் குறைந்த சம்பள வீதம் நாளொன்றுக்கு தொழிலாளி ஒருவருக்கு 750 ரூபாவாக இருத்தல் வேண்டும்.

*7- 743*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.